

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை மாநகராட்சியின் மேயராக பொறுப்பு வகித்த போது, அவர்களின் ஓட்டுநராக பணியாற்றி ஓய்வுபெற்ற வெங்கடேசன் மறைவுற்ற செய்தியறிந்து கழக இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மடிப்பாக்கத்தில் உள்ள அவரது இல்லத்தில், அன்னாரின் உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து, குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். அமைச்சர் மா.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

# கலைஞரின் கனவைக் காலம் நிறைவேற்றும்!



**சி**ல நாள்களுக்கு முன்பு, சென்னையில் நடைபெற்ற, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய, தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமாகிய நம் தளபதியவர்கள் குறிப்பிட்டுள்ள ஒரு செய்தி ; மிகப்பெரிய வரலாற்றுச் சிறப்புடையது!

வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் யார், யார் வெற்றி பெற வேண்டும் என்பதை விட, யார் வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்துவிடக்கூடாது என்பது முக்கியமானது என்று கூறியிருக்கிறார்.

இது எதிர்மறைச் சிந்தனை இல்லையா என்றுதோன்றும். எதிர்மறைச்சிந்தனைதான். ஆனால் சில நேரங்களில், வரலாற்றில் இப்படிப்பட்ட சிந்தனைகள் தேவைப்பட்டிருக்கின்றன!

பொது எதிரியை வீழ்த்துவதற்கு, கருத்து வேறுபாடுகள் உள்ள கட்சிகள் கூட ஒருங்கிணைந்து நின்று, களத்தைச் சந்திப்பது இயல்பானதும், தேவையானதுமாகும்! இன்றைய உடனடித் தேவை, ஒரு தீய சக்தியை ஆட்சியில் இருந்து அகற்றுவதுதான் என்பதை உணர்ந்து நம் தலைவர் பேசியிருக்கிறார்!



பேராசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

இது எப்படிக் கலைஞரின் கனவாகும் என்ற ஐயம் எழலாம். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா வழியில் நின்று தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டில் உருவாக்கியுள்ள சமத்துவ, சமூக நீதிச் சிந்தனைகள் நிலைபெற வேண்டும் என்பது அவருடைய கனவாகத்தான் இருக்க முடியும்! அவை தொடர்ந்து நிலைத்திட வேண்டுமானால், அவற்றைக் குலைக்கிற, அழிக்கத் துடிக்கிற ஒரு கட்சி ஒன்றிய அரசில் ஆட்சியில் இருக்கக் கூடாது என்பதுதானே சரியானது!

இன்றைக்கும் தமிழ்நாட்டில் நடப்பதைப் போல், சுயமரியாதை, சாதி மறுப்புத் திருமணங்கள் வடநாட்டில் வெளிப்படையாகப் பொதுவான அரங்குகளில், அவ்வளவு எளிதாக நடந்து விட முடியாது! தமிழ்நாட்டில் இருப்பது போல் கடவுள், மதம் தொடர்பான வெளிப்படையான விவாதங்கள் வடநாட்டில் நடக்க வாய்ப்பில்லை. இவை திராவிட இயக்கம் தமிழ்நாட்டில் ஏற்படுத்திய மாற்றங்கள்!

இப்போதும் கூட 14, 17 வயதுப் பெண்களுக்குத் திருமணம் ஆவதும், அவர்கள் கருவுற்றிருப்பதும் மனுநீதி ஏற்றுக்கொண்டு உள்ள ஒன்றுதான் என்று குஜராத் உயர் நீதிமன்றம் கூறியுள்ளது! மனுநீதியே இன்றைக்கும் ஆரிய பார்ப்பனச் சட்டமாக அங்கு உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் சமூக நீதிக்குத்தான் என்றும் தலைமையிடம் என்பதை நாம் அறிவோம்!

மனுநீதியைத் தங்களின் சட்டமாக வைத்திருக்கும் ஆர்.எஸ்.எஸ். ஆட்சி, மறுபடியும் ஏற்பட்டு விடாமல் தடுப்பதுதான் கலைஞரின் நினைவை நாம் போற்றுவதாகும் என்று முதலமைச்சர் கூறியிருக்கிறார். அதனை நெஞ்சில் கொண்டு, இன்றிலிருந்தே பணியாற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் நம் அனைவருக்கும் இருக்கிறது!

அதற்கு ஏற்ற சூழலும் இந்திய அளவில் இன்று கனிந்து வருகிறது! பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் வரும் 23ஆம் தேதி பாட்னாவில் கூட்டி இருக்கும் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் இந்த வெற்றிக்கு வழி வகுக்கக் கூடியது! மேற்கு வங்கத்தில் எதிரும் புதிருமாக பிரிந்து நின்ற காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் ஆகிய கட்சிகளையும், கேரளாவில் போட்டியிடும் காங்கிரஸ் கம்யூனிஸ்ட் கட்சிகளையும் ஒரே அரங்கிற்குள் அவர் கூட்டி வருகிறார்! திமுக, ஆம் ஆத்மி போன்ற வலிமையான கட்சிகளும் அன்று பங்கேற்கின்றன. அந்தக் கூட்டம், ஒரு நம்பிக்கைக் கீற்றை நாட்டுக் குத் தந்திருக்கிறது!

இந்தியா முழுவதும் தாங்களே வலிமையாக இருப்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை பி.ஜே.பி. ஏற்படுத்த முயன்றாலும் உண்மை அப்படி இல்லை! ஏற்கனவே தென்னிந்தியா முழுவதும் அவர்கள் துடைத்து எறியப்பட்டு இருக்கிறார்கள்! வடஇந்தியாவிலும் கூட, பஞ்சாப், ராஜஸ்தான், தில்லி, பீகார் முதலிய மாநிலங்களில் அவர்களின் ஆட்சி இல்லை. மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், ஆட்சியை அவர்கள் குறுக்கு வழியில் தான் பெற்றிருக்கிறார்கள். எனவே உத்தர பிரதேசம்,குஜராத் தவிர அவர்கள் வலிமையாக அமர்ந்திருக்கும் பெரிய மாநிலங்கள் வேறு எதுவும் இல்லை!

அனைவரும் ஒன்று கூடி உழைத்தால், கைக்கெட்டும் தொலைவில்தான் வெற்றி இருக்கிறது! நம்பிக்கையோடு இருப்போம், கலைஞரின் கனவைக் காலம் நிறைவேற்றும்!

நன்றி : **கருஞ்சட்டைத் தமிழர்**
10.6.2023

# முதல்வரின் சிறப்பு மேட்டூர் அணை திறப்பு



**கோ**டையிலே வெயில்வந்து
கொளுத்துகிற சூழலிலே
மேடையிலே வீசுகிற
மெல்லிய பூங்காற்றாய்!

நம் முதல்வர் ஸ்டாலின்
நற்செய்தி தருகின்றார்
எம் முதல்வர் எனப் போற்ற
இதயத்தில் நிறைகின்றார்!

காவிரி டெல்டாவின்
கடைமடை விவசாயிகள்
ஆவலுடன் எதிர்பார்த்ததை
அற்புதமாய்ச் செய்கின்றார்!

வாட்டமுற்ற நெஞ்சிலே
வார்த்திட்ட பால்போல
மேட்டூர் அணை நாளை
மெய்சிலிர்க்க திறக்கின்றார்!

கடந்த கால ஆட்சியிலே
கண்ணீர்விட்ட விவசாயிகள்
அடைந்திட்ட துயரங்களை
அரை நொடியில் தீர்த்திட்டார்!

சரியான நேரத்தில்
சரியான முடிவெடுத்து - பூமி
தரிசாகப் போகாமல்
தவிர்த்திட்டார் தளபதி…!

விவசாயி மனங்குளிர்ந்தால்
வீடெல்லாம் மணக்குமென்ற
புவிபோற்றும் உண்மையை
புரிந்தவரே நம் முதல்வர்!

பிறந்திட்ட மண்ணுக்குப்
பெருமைதனை சேர்க்கின்ற
சிறந்த முதல்வருக்கு - மனம்
நிறைந்த வாழ்த்துக்கள்!

எப்போதும் தமிழ்நாடு
எழிலோடு விளங்கிட
முப்போகச் சாகுபடிக்கு
முறையாகச் சிந்திக்கிறார்!

புவிபோற்றும் வகையிலே
புதுமை பல வகுத்து
நவீன “கரிகாலனாய்”
நம்மிடையே வாழ்கின்றார்!

நாட்டின் விவசாயமே
நமது உயிர் நாடி என - நிலை
நாட்டிய தளபதியை
நலமுடனே வாழ்த்துவோம்!

தமிழ்நாட்டின் நலனையே
தாரக மந்திரமாக்கி
இமைபோல காக்கின்ற
எம் முதல்வர் வாழியரே…!

இதுபோல நன்மைகள்
இனிப்பாகத் தொடரட்டும்
சாதனைகள் படர்ந்து
சரித்திரம் படைக்கட்டும்!

ஓங்கட்டும் செழுமை…
ஒழியட்டும் வறுமை…
- எதையும்
தாங்குகிற தளபதியால்
தழைக்கட்டும் வளமை…!

காவிரித் தாயே - எங்கள்
கண்மணி நீயே…!
மேவுகிற தமிழகத்தின்
மேனி செழிப்பதற்கு!

ஆவலுடன் ஓடிவந்து
அகம் நனைப் பாயே…!
பூவிரித் தாயே - தளபதிக்கு
புகழ்கூட்டு வாயே…!

நேரிலே ஆய்வு செய்து
நேர்மையுடன் செயலாற்றும்
சீர்மிகு முதல்வரை
சிறப்புற வாழ்த்திடுவோம்!



- கவிஞர் இரவி பாரதி

## அரசு எச்சரிக்கை : விதிமுறைகளை மீறி

# விளம்பர பலகைகள் வைத்தால் 3 ஆண்டு சிறை!

சென்னை, ஜுன் 11 -

பேனர்கள் மற்றும் பதாகைகள் ஆகியவை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிமம் பெறாமல் நிறுவப்ப டக்கூடாது. உரிமம் பெறாமல் ஏற்கனவே நிறுவப்ப ட்டுள்ள விளம்பரப் பலகைகள், பேனர்கள், பதாகைகள் ஆகியவை உடனடியாக பிரிவு 1170 ன்படி அகற்றப் பட வேண்டும்.

சென்னை: நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் வெளியி ட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்ப தாவது: 2022ம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35ன்படி திருத்தப்பட்ட 1998ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின்படியும், அதன் கீழ் உருவாக்கப்பட்ட 2023ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின்படியும், விளம்பரப் பலகைகள், பேனர்கள் மற்றும் பதாகைகள் ஆகியவை சம்பந்தப் பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிமம் பெறாமல் நிறுவப்பட க்கூடாது. இச்சட்டம் 2023ம் ஆண்டு ஏப்ரல் 13ந் தேதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. உரிமம் பெறாமல் ஏற்கனவே நிறுவப்ப ட்டுள்ள விளம்பரப் பலகைகள், பேனர்கள், பதாகைகள் ஆகியவை உடனடியாக பிரிவு 1170 ன்படி அகற்றப் பட வேண்டும். அதேபோல், உரிமக்காலம் முடிந்தபின்பும், சட்ட விதிமுறைகளை மீறி வைக்கப் பட்டுள்ள அனைத்து விளம்பரப் பலகைகள், பேனர்கள், பாதகைகள் ஆகியவையும் உடனடியாக பிரிவு 117Pன்படி அகற்றப்பட வேண்டும். மேற்படி பிரிவுகள் 117O, 117P ஆகியவற்றின்படி, விளம்பரப் பலகைகள், பேனர்கள், பதாகைகள் ஆகியவற்றை அகற்றத் தவறினால், அவைகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு களே அகற்றி விடும். பின்பு, அதற்கான செலவினம் பிரிவுகள் 117O, 117P மற்றும் விதிகள் 338, 345 ஆகியவற்றின்படி அந்தந்த நிறுவனங்க ளிடம் இருந்து அல்லது தனி நபர்களிடம் இருந்து வசூலிக்கப் படும். மேற்கூறிய விதிமுறைகளை மீறி செயல்படும் நிறுவனம், தனிநபர், நிலம் மற்றும் கட்டிட உரிமையாளர் ஆகியோர் மீது மூன்று வருட சிறைதண்டனையோ அல்லது ரூ.25 ஆயிரம் அபராதமோ அல்லது இவை இரண்டும் சேர்த்தோ விதிக்க வழிவகை செய்யப் பட்டுள்ளது. உரிய அனுமதியின்றி பேனர்கள், பதாகைகள் ஆகியவற்றை அமைக்கும் நிறுவனம், தனி நபர், நிலம் மற்றும் கட்டிட உரிமையாளர் ஆகியோர் மீது ஒரு வருட சிறை தண்டனையோ அல்லது ரூ.5 ஆயிரம் அபராதமோ அல்லது இவை இரண்டும் சேர்த்தோ விதிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. விதிகள் 322, 341ல் வரையறுக்கப்பட்டுள்ள இடங்களில் மற்றும் வரையறுக்கப் பட்டுள்ள அளவுகளில் மட்டுமே விளம்பரப் பலகைகள், பேனர்கள், பதாகைகள் ஆகியவைகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிமம் பெற்று அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. விளம்பரப் பலகைகள், பேனர்கள், பதாகைகள் ஆகியவற்றின் மூலம் பொது மக்களுக்கு எதிர்பாராத விபத்துக்கள் ஏற்பட்டு, பொதுமக்கள் காயமடைந்தாலோ அல்லது ஏதேனும் உயிரிழப்பு ஏற்பட்டாலோ அதற்குரிய இழப்பீடு வழங்குவதற்கு விளம்பரப் பலகைகள், பேனர்கள், பதாகைகள் ஆகியவற்றை அமைத்த நிறுவனமும், தனி நபரும், நிலம் மற்றும் கட்டிட உரிமையாளரும் முழு பொறுப்பாவார்கள். மேலும் உரிய குற்றவியல் வழக்கு பதியப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு அதில் கூறப்ப ட்டுள்ளது.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி கறம்பக்குடி ஒன்றியம் முள்ளங்குறிச்சி ஊராட்சி சூரக்காடு, கோட்டைக்காடு, கறுப்பகோன்தெரு, வடத்தெரு ஊராட்சி, பட்டத்திக்காடு ஊராட்சி தொண்டைமான்தெரு உள்ளிட்ட பகுதிகளில் 7 / 6 /2023 அன்று எதிர்பாராத விதமாக வீசிய சூறாவளி காற்றில் பல்லாயிரக் கணக்கான வாழை மரங்கள் சேதமடைந்தன, 9 /7 /2023 அன்று நேரில் சென்று சேதம் அடைந்த வாழை மரங்களை பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆறுதல் கூறி பாதிப்படைந்த. விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் கிடைத்திட உடன் வரிகை புரிந்த அதிகாரிகளுக்கு புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா வலியுறுத்தினார். இந்நிகழ்வின் கறம்பக்குடி தெற்கு ஒன்றியச் செயலாளர் தவ.பஞ்சாலன், அரசு ஒப்பந்தக்காரர் என்.ஆர்.பரிமளம் மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்

## தமிழினத் தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# சென்னை ராமகிருஷ்ணா மாணவர் இல்லத்தில் உணவு வழங்கல்!

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் வழங்கினார்!

சென்னை, ஜுன் 11-

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் சென்னை ராமகிருஷ்ணா மிஷன் மாண வர்கள் இல்லத்தில் அறுசுவை உணவு வழங்கும் விழா. மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது.

சிறுபான்மையின மக்களின் முகவரியாக திகழும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராய் சமூக நீதி காக்கும் கழகத்தையும், 5 முறை முதலமைச்சராய் நவீன தமிழ்நாட்டையும் கட்டமைத்து, தனது வாழ்நாளெல்லாம் உலகத்தமிழர்களுக்காக உழைத்து அவர்தம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை சிறப்பிக்கும் நிகழ்வாக, கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில், சென்னை மயிலாப்பூரில் அமைந்துள்ள ராமகிருஷ்ணா மிஷன் மாணவர்கள் இல்லத்தில் இனிப்புகளுடன் கூடிய அறுசுவை மதிய உணவு வழங்கும் நிகழ்வு அதன் மாநில செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், கழக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாநில துணைச் செயலாளர்கள் ரபி அஹமது, சாகுல் அமீது, தென்மேற்கு மாவட்ட அமைப்பாளர் ஜெகன்ராஜ் மற்றும் தி.மு. கழகத்தினர் பங்கேற்று சிறப்பித்தனர்.


## பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து சாலைகள் துறை

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

பே.சா.து.ந.க.எண்.பி3/2761/2023

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**NSMT - 2023-24**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோராயமாக (GST 18% சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் - 14ல் உள்ள 1 எண்ணிக்கையிலான பேருந்து சிமெண்ட் கான்கீரிட் சாலைகளை மேம்படுத்தும் பணி | 1 முதல் 4 | குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.241.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.244.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 27.06.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 28.06.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 2966 / ஒப்பந்தப்புள்ளி / 2023

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)




கோவை மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன் அண்ணா நகர் காவல் செக் போஸ்ட் ஐ திறந்து வைத்து மாணவ மாணவிகள் பொதுமக்களுக்கு நல உதவிகள் வழங்கினார். உடன் அவைத் தலைவர் சோ. துரை பாண்டியன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.